# பெப்ரவரி - 08 - புதன்

## புனித ஜெரோம் எமிலியன்

“தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன” மாற்.7:23

-----------------------------------------------------------------

**முதல் வாசகம்: தொடக்க நூல் 2: 4 – 9,15 – 17**

கடவுள் நாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார்.இவையே விண்ணுலக, மண்ணுலகப் படைப்பின் தோற்ற முறைமையாம். ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும், விண்ணுலகையும் உருவாக்கிய பொழுது,மண்ணுலகில் நிலவெளியின் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை வயல்வெளியின் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை ஏனெனில் ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை. ஆனால் நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும் நனைத்தது.அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்.ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார்.ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்குச் சுவையானதுமான எல்லா வகை மரங்களையும், தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார்.ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்.ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், ”தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம்.ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே் ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்” என்று கட்டளையிட்டுச் சொன்னார்.

**பதில்பாடல்:** என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு

**நற்செய்தி: மாற்கு 7: 14 - 23**

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தை மீண்டும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி, ”நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப்படுத்தும். (கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்”) என்று கூறினார். அவர் மக்கள் கூட்டத்தை விட்டு வீட்டிற்குள் வந்தபோது அவருடைய சீடர் அவரிடம் இந்த உவமையைப்பற்றிக் கேட்க, அவர் அவர்களிடம், ”நீங்களுமா இந்த அளவுக்குப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்? வெளியேயிருந்து மனிதருக்குள்ளே செல்லும் எதுவும் அவர்களைத் தீட்டுப் படுத்த முடியாது என உங்களுக்குத் தெரியாதா? ஏனென்றால், அது அவர்களுடைய உள்ளத்தில் நுழையாமல் வயிற்றுக்குச் சென்று கழிப்பிடத்திற்குப் போய் விடுகிறது” என்றார். இவ்வாறு அவர் எல்லா உணவுப் பொருள்களும் தூயனவென்று குறிப்பிட்டார். மேலும் ”மனிதருக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன. தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன” என்றார்.

**தியானம்:** ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்னரே, அக் குழந்தைக்குத் தேவையான அனைத்தையும் பெற்றோர் தேடித் தேடிச் சேர்ப்பதும், அவை அனைத்தும் தமது குழந்தைக்கு ஏற்றனவாகவும், சௌகரிமானதுமாக இருக்கவேண்டும் எனவும் அவர்கள் கருத்தாய்ச் செயற்படுவது இயல்புதானே! அவ்வாறே கடவுளும் மனிதர்களாகிய தம் பிள்ளைகளைப் படைப்பதற்கு முன், அவர்கள் இவ்வுலகத்தில் சௌகரியமாக வாழத் தேவையான அனைத்தையும் முன்னதாகவே படைத்தார். அவை அனைத்தும் நலமெனக் கண்டார். அவ்வாறிருக்க கடவுள் படைத்த தோட்டத்தில் உள்ள கனிமட்டும் எவ்வாறு மனிதனைத் தீட்டுப் படுத்தி பாவத்தில் விழச் செய்திருக்கமுடியும்? என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழக்கூடும் அல்லவா? கடவுள் ஆதாமிடம் “ஏன் இவ்வாறு செய்தாய்? ”என வினவ அவன் தன் மனைவியாகிய ஏவாளையும், ஏவாள் பாம்பையும் குற்றம் நிலையைப் பார்க்கின்றோம். உண்மையில் அவர்கள் பாவம் செய்யக் காரணம் அவர்கள் உள்ளத்தில் எழுந்த தீய எண்ணங்கள் தாமே என்பதை இறைமகன் இயேசுவின் கற்பித்தலிலிருந்து அறிந்துகொள்ளலாம் அன்றோ! நாம் பாவம் செய்யக் காரணம் அவரென்றும், இவரென்றும்: அதுவென்றும், இதுவென்றும் காரணங்கள் காட்டி நியாயப்படுத்து வதைவிடுத்து, நாம் பாவம் செய்யக் காரணமாக நம் உள்ளங்களில் இருந்து எழும் பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்களே என்பதைப் புரிந்து கொண்டு நமது எண்ணங்களைத் தூய்மைப் படுத்தி வாழ முயற்சி செய்வோமாக!